பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

26 08 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

- சுயசார்பு இந்தியா என்ற நிலையை அடைய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு மக்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- பேச்சு சுதந்திரம் ஜனநாயகத்தின் வலிமை என்றும், இந்த சுதந்திரத்தை கண்ணியமான முறையில் பயன்டுத்த வேண்டும் என்றும் மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.
- தமிழகத்தில் நகர்ப்புறங்களில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.
- மாநிலத்தில் மின்கட்டண உயர்வால் சிறுதொழில்கள் வளர்ச்சி சரிவடைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் மகளிர் ஜூனியர் 25 மீட்டர் குழு பிரிவில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சுயசார்பு இந்தியா என்ற நிலையை அடைய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு மக்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் அகமதாபாதில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்துப் பேசிய அவர், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பொருட்களின் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாடு தற்சார்பு என்ற நிலையை நோக்கி வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருப்பதாக அவர் கூறினார்.

2047ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக திகழும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், சிறுதொழில்முனைவோர் ஆகியோரின் நலனுக்கு அரசு முக்கியத்துவம் அளிப்பதாக அவர் கூறினார்.

எந்த சூழலிலும் அவர்கள் பாதிக்கப்படாத அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழைகளின் வாழ்வாதாரத்தை எளிதாக்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

பேச்சு சுதந்திரம் ஜனநாயகத்தின் வலிமை என்றும், இந்த சுதந்திரத்தை கண்ணியமான முறையில் பயன்டுத்த வேண்டும் என்றும் மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

தில்லி சட்டப்பேரவையில் நடைபெற்ற அகில இந்திய சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், நாடாளுமன்றதில் கண்ணியக் குறைவாக நடந்துகொள்வது கவலை அளிப்பதாகவும், கட்சி உறுப்பினர்கள் அவைக்குள் உரிய முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அவையை அதிக வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புடனும் நடத்த வேண்டும் என்று சட்டப்பேரவைத் தலைவர்களை திரு. ஓம் பிர்லா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மாநிலத்தில் கடந்த மாதம் 10ஆம் வகுப்பு துணைத் தேர்வு எழுதி மதிப்பெண் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் இன்று பிற்பகல் வெளியிடப்பட உள்ளது.

இதுகுறித்து அரசு தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் மதிப்பெண்களை அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் இன்று பிற்பகல் முதல் இணையதளத்தில் தங்களது விவரங்களைப் பதிவு செய்து தற்காலிக மதிப்பெண் சான்றிதழை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்றும் அரசு தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

மாணவிகளின் கல்வி முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக தேசிய நல்லாசிரியர் விருது தமக்கு கிடைத்தள்ளதாக திருப்பூர் அரசுப் பள்ளி ஆசிரியர் திருமதி விஜயலட்சுமி கூறியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் நகர்ப்புறங்களில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இன்று முதல் அமல்படுத்தப்படுகிறது.

சென்னை மயிலாப்பூரில் உள்ள புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் இன்று காலை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இத்திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் இந்த 5வது கட்டம், மாநிலத்தில் உள்ள 2 ஆயிரத்து 429 பள்ளிகளில் தொடங்கப்பட உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் 3 லட்சத்து 6 ஆயிரம் மாணவர்கள் பயனடைவார்கள் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க பஞ்சாப் முதலமைச்சர் திரு. பகவந்த் மான் நேற்று சென்னை வந்தடைந்தார்.

<<<<>>>>

மாநிலத்தில் மின்கட்டண உயர்வால் சிறுதொழில்கள் வளர்ச்சி சரிவடைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

திருச்சி மேற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தமிழகத்தில் மின்கட்டணம் 67 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும், விலைவாசி அதிகரித்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

பாரம்பரிய தொழிலான கைத்தறி தொழிலைப் பாதுகாக்க வேண்டும் என்று பிஜேபி தேசிய மகளிரணித் தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவையில் தனியார் கல்லூரியில் நடைபெற்ற தேசிய கைத்தறி தின கொண்டாட்ட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், கைத்தறியை பிரபலப்படுத்துவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னுரிமை அளிப்பதாகவும், இத்துறைக்கு அவர் சிறந்த தூதுவராக திகழ்வதாகவும் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த 2 நாட்களாக சிறுத்தை ஒன்று உலவி வருகிறது.

சிறுத்தையை பிடிக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளதாகவும், பொதுமக்கள் இரவு நேரங்களில் வெளியே நடமாட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தெற்கு காஸா பகுதியில் மருத்துவமனையின் மீது இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் 5 பத்திரிகையாளர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

நாட்டில் விவசாயிகளின் நலன் கருதி அமெரிக்காவில் இருந்து வேளாண் பொருட்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு மறுத்துவிட்டதாக வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பீஹாரில் வாக்காளர் சிறப்புத் திருத்த நடவடிக்கையில் இதுவரை 99 புள்ளி ஒன்று ஒன்று சதவீத வாக்காளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் 27 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் அடிக்கல் நாட்டினார்.

-குமார்

தமிழகத்தில் செல்லப் பிராணிகளை விற்பனை செய்வோர் அடுத்த மாதம் 30ஆம் தேதிக்குள் தமிழ்நாடு விலங்குகள் நலவாரியத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை திண்டுக்கல் மாநகராட்சியில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பாக அப்போதைய ஆணையாளர் உட்பட 5 அதிகாரிகள் மற்றும் தனியார் நிறுவன உரிமையாளர் மீது லஞ்ச ஒழிப்புத்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

<<<<>>>>

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே தைக்காலில் அறுந்து விழுந்த கிடந்த மின்கம்பியை மிதித்த 5 பசுமாடுகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தன.

<<<<>>>>

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தென்காசி மாவட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் காவல்துறையின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து மனநல காப்பகங்களும் ஒருமாத காலத்திற்குள் மாநில மனநல ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று ஆட்சியர் திரு. பிரதாப் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மாநிலத்தில் வாகனக் கழிவு நிலையங்கள் அமைக்க விரும்புவோர் சென்னை கிண்டியில் உள்ள போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் மகளிர் ஜூனியர் 25 மீட்டர் குழு பிரிவில் இந்தியாவின் பாயல், தேஜஸ்வினி, Riya Shrish Thatte குழு வெள்ளிப் பதக்கம் வென்றது.

கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இதுவரை 28 தங்கம், 10 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

<<<<>>>>

கோலாலம்பூரில் நடைபெற்ற 23 வயதுக்குட்பட்டோருக்கான நட்புணர்வு கால்பந்து போட்டியில் ஈராக் 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

<<<<>>>>

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரவு முதல் சுற்றில் இந்தியாவின் HS பிரனாய் இன்று ஃபின்லாந்தின் Joakim Oldorff-ஐ எதிர்கொள்கிறார்.

பாரீசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.சி. சிந்து, பல்கேரியாவின் Kaloyana Nalbantova-ஐ எதிர்கொள்கிறார்.

<<<<>>>>